**இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் (''பணியகம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து பணியகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 05 – அந்நிய செலாவணி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளின் 43(அ) பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊக்குவிப்பு | தேவையான வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியானது உரிய தூதரகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கொடுப்பனவு திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தின் | தீர்க்கப்படாத வெளிநாட்டு முற்பணங்களில் அந்நியச் செலாவணி இலாபத்தை |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் தொடர்பாக தூதரகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 42,911,308 தொகையான தீர்க்கப்படாத வெளிநாட்டு முற்பணங்கள் மூலம் ரூபா 32,782,245 தொகையான அந்நியச் செலாவணி ஆதாயத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அல்லது தொடர்புடைய தூதரகத்திடம் இருந்து மீதி உறுதிப்படுத்தல் எதுவும் பெறப்படாததாலும், மேற்படி மீதிக்காக விரிவான வயதுப் பகுப்பாய்வு பெறப்படாததாலும், மேற்படி ரூபா 42,911,308 தொகையான தீர்க்கப்படாத வெளிநாட்டு முற்பணங்களை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | அடிப்படையில் இலங்கை ரூபாயில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் (MFA) வைப்புச் செய்யப்படுகிறது. MFA மற்றும் தூதரகங்கள் ஆகிய இரண்டின் கணக்குகளும் இலங்கை ரூபாயில் பேணப்படுகின்றதால், MFA இல் வைப்புச் செய்யப்பட்ட தொகையானது தூதரகத்தால் பெறப்பட்ட தொகையாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும், கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவுகளின் பின்னர் மீதமுள்ள தொகை (ஏதேனும் இருந்தால்) அதன் பிரகாரம் பணியகத்தால் கணக்கிடப்படும் என்றும் MFA தெரிவித்துள்ளது. | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| செலுத்த வேண்டிய வைகள் | 26,178,738 | 28,408,182 | 2,229,444 | 2021 கணக்குகளின் பிரகாரம் SLTDA மற்றும் SLTPB ஆகியவற்றுக்கு இடையே பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றில் ரூபா 44,607,646 வேறுபாடு இருந்ததுடன் தரப்பினர்களிடையே அடிக்கடி நடந்த கலந்துரையாடலின் விளைவாக 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2,229,444 வரை எங்களால் குறைக்க முடிந்திருந்தது என்பதை நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த ஆண்டின் இறுதியளவில் கணக்குகள் இணக்கம் செய்யப்படும் என நாங்கள் நம்புகிறோம். | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 முதல் 11 வருட காலப்பகுதிக்கான ரூபா 12,457,980 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன்னொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் இருந்தன. | தேவையான அங்கீகாரங்கள் மற்றும் ஆவணங்கள் கிடைக்காததால், கொடுப்பனவுகளிற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை, மேலும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2 முதல் 4 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்கு ரூபா 1,204,283 கூட்டுமொத்தமான நிலுவையாக உள்ள அட்டுறு செலவினங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாமல் இருந்தன. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளின் பிரகாரம் கடந்த 2 முதல் 4 ஆண்டுகளின் போது செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 3,778,427 ஆக இருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,204,283 வரை குறைக்கப்பட்டுள்ளது. | தீர்ப்பனவு செய்வதற்கும் பொறுப்பு பட்டியலிலிருந்து அவற்றை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பந்தியின் 09 ஆம் உபபிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் ஆண்டின் செயற்பாடுகள் குறித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கம் முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தேவைப்பாடுகள் பின்பற்றப்படும். | ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அந்த ஆண்டின் செயற்பாடுகள் குறித்த அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனக் விதிக்கோவையின் II ஆம் | பதவி உயர்வுகள் அல்லது நியமனங்கள் ஒரு பதவியை நிறுவிய திகதியிலிருந்து அல்லது அதற்குப் பின்னர் | பதவி உயர்வுகளுக்கான முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் | பதவி உயர்வுகள் அல்லது நியமனங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தியில் உள்ள 1.9 ஆம் பிரிவு | அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்படக்கூடியதாக அல்லது பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் பணியகத்தின் 02 பெண் உத்தியோகத்தர்களுக்கு முறையான அங்கீகாரம் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் தாபன விதிக்கோவைக்கு முரணாக 09 ஆண்டுகளுக்கும் மேலாக பின்னோக்கி திகதியிடப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. மேலும், பதவி உயர்வுக்கான குறைந்தபட்ச சேவை ஆண்டுகளான 10 ஆண்டுகள் உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. பதவியை வகிக்கும் காலப்பகுதி முடிவடையும் வரை பதவி உயர்வு பெற்ற பதவியின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் பதிறகடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | ஒரு பதவி நிறுவப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதற்குப் பின்னர் அமுலுக்கு வரும் வகையில் அல்லது பதவி பெற்றிடமாக இருக்கும் போது மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ)<br>(i) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டு கையேடு<br>2.3 ஆம் பந்தி | அனைத்து SOE களும் இந்த கையேட்டின் தொடர்புடைய ஏற்பாடுகளிற்கு இணங்க தங்கள் சொந்த நிர்வாக மற்றும் நிதி கையேடுகளை பின்பற்ற வேண்டியதுடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், நாளதுவரை எந்த நிர்வாக மற்றும் நிதி கையேடுகளும் பணியகத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகம் தாபன விதிக்கோவை மற்றும் நிதி பிரமாணங்களைப் பின்பற்றுகிறது. மேலும் பணியகம் SOE களுக்கு பொருந்தக்கூடிய அரசாங்க சுற்றறிக்கைகளை ஏற்றுக்கொள்கிறது. நிர்வாக நோக்கங்களுக்காக தாபன விதிக்கோவை, நி.பி. விதிக்கோவை மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பயன்படுத்துவது பணியகத்தின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | இந்த கையேட்டின் தொடர்புடைய ஏற்பாடுகளிற்கு இணங்க தனித்தனி நிர்வாக மற்றும் நிதி கையேடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 3.2 (i) ஆம் பந்தி | நிறுவகத்தின் போக்குவரத்துப் படியாக செலுத்தப்படும் ரூபா 4000 படிக்கு மேலதிகமாக, 2022 ஒக்தோபர் 01 முதல் திறைசேரியின் அங்கீகாரமின்றி **69** ஊழியர்களுக்கு ரூபா 6000 மேலதிகப் படி வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் செலுத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 15.2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் குறித்த | மேலதிகப் படிகளை செலுத்துவதற்கு முன்னர் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் மேலதிகப் படியாக செலுத்தப்பட்ட தொகை ரூபா **1,197,600** ஆகும். | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (iii) | 3.4 (x) ஆம் பந்தி | ஒவ்வொரு SOE இற்கும் ஒரு தொடர் திட்டம் இருக்க வேண்டிய போதிலும் பணியகம் நாளதுவரை தொடர் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை SLTPB பின்பற்றுகிறது. அதன் பிரகாரம் SLTPB தர உயர்வுகள் மற்றும் உள்ளக பதவி உயர்வுகளை வழங்குகிறது. எனவே, தொடர் திட்டமிடலானது தகைமைகளை பூர்த்தி செய்து, அங்கீகரிக்கப்பட்ட SORகளின் பிரகாரம் அடுத்த பதவி உயர்வு தரங்கள் அல்லது பதவிகளுக்கு தகுதி பெறுகிறது. | தொடர் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 7,094,939,345 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,644,467,520 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 2,450,471,825 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 1,369,464,349 ஆல் அதிகரித்தமை, சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 199,989,695 ஆல் அதிகரித்தமை மற்றும் முதலீட்டின் மீதான வட்டி வருமானம் ரூபா 572,959,702 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்கண்டிநேவியா, ஸ்பெயின், ஆஸ்திரியா, செக் குடியரசு, ஜப்பான், அமெரிக்கா, கனடா, துருக்கி, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட விளம்பர | நீங்கள் அறிந்தது போல், SLTPB இன் செயற்பாடுகள் 3c இன் உலகளாவிய அரங்கில் உள்ள COVID நிலைமை, நாட்டில் FOREX இன் நெருக்கடி மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளால் தடைபட்டது. | சுற்றுலாத் தலமாக இலங்கை மீதான ஈர்ப்பை மேம்படுத்துவதற்கு விளம்பர நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு நடாத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் எதுவும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | அதன் பிரகாரம் SLTPB அதன் விளம்பர நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. | |
| (ஆ) பணியகத்தின் பணிப்பாளர் சபை 2022 மே 09 முதல் 12 வரை ரூபா 90,000,000 கிரயத்தில் அரேபிய பயணச் சந்தையில் (ATM-2022) பங்கேற்பதற்கு 2021 திசெம்பர் 17 இல் அங்கீகாரம் அளித்திருந்தது. பின்னர் ரூபா மதிப்பு சரிவு காரணமாக பணியகத்தின் தலைவரால் 2022 மார்ச் 29 இல் இக் கிரயம் ரூபா 120,464,910 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 250 சதுர மீற்றர் இடத்தை முன்பதிவு செய்வதற்கு கேள்வி கோரப்பட்ட போதிலும் பொருளாதார நிலைமை காரணமாக பணிப்பாளர் சபை அந்த இடத்தை 150 சதுர மீற்றராகக் குறைத்திருந்தது. எனினும், இடம் குறைக்கப்படுதல் கிரயக் குறைப்புக்கு தாக்கமளித்திருக்கவில்லை. அது தொடர்பான ஆரம்ப கிரயம் ஐ.அ.டொலர் 16,175 ஆல் அதிகரித்திருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 2,444.55 வற் கட்டணங்கள் மற்றும் றிபன், கத்தரிக்கோல், மெழுகுவர்த்திகள் மற்றும் தட்டு ஆகியவற்றிற்காக ஐ.அ.டொலர் 525 ஏற்பட்டிருந்தது. எனவே, 2021 திசெம்பரில் முடிவு எடுக்கப்பட்ட போதிலும், பணியகம் நிகழ்வை சரியாக திட்டமிட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | நேரமின்மை மற்றும் ஏனைய கேள்விதாரர்களால் மறுக்கப்பட்டதால் குறைந்த பேரம் பேசும் திறன் மற்றும் அந்த நேரத்தில் அடைந்துகொள்ள முடியாத நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ளுதல் காரணமாக, SLTPB இற்கு வேறு வழியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதுபோன்ற இழப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 7,600,000 பங்களிப்பிற்கு இணங்கி லங்கா விசைப் படகு சங்கத்தால் 2017 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெந்தோட்டையில் நடைபெற்ற | இந்த போட்டி பின்னர் 2017 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் இது அப்போதைய சுற்றுலா அமைச்சரும் அப்போதைய | ஒவ்வொரு கொள்வனவிலும் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வதி லும் பெறுகை |

| | | |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சர்வதேச விசைப் படகுப் போட்டியில் பணியகம் பங்குபற்றியிருந்தது. எனினும், மொத்த கிரயத்தில் 20 சதவீதத்திற்கு சங்கத்தால் வங்கி உத்தரவாதம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை, பெரும்பாலான விளம்பர நடவடிக்கைகள் சங்கத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை, இணங்கப்பட்ட கிரயம் ரூபா 3,172,859 அல்லது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது, இங்கிலாந்திலிருந்து விசைப் படகுகளை கொண்டுசென்று திரும்புவதற்கு கப்பல் கம்பனியொன்றை தெரிவு செய்தல் தொடர்பாக பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. விசைப் படகு போட்டி நடத்துவதில் தாமதமும், படகுகளை கப்பலில் ஏற்றுவதில் தாமதமும் ஏற்பட்டது என்பன அவதானிக்கப்பட்டன. | விளையாட்டுத்துறை அமைச்சரும் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடாத்தப்பட்டது. விளம்பர நடவடிக்கைகளில் முக்கிய வழங்கல்களின் அடைந்துகொள்ளல்கள் குறித்து ஏற்பாட்டாளரிடமிருந்து விரிவான அறிக்கை எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மூலம் கப்பல் கம்பனி தெரிவுசெய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. ஏற்பாட்டாளர் இங்கிலாந்தில் உள்ள கப்பல் கம்பனி மற்றும் இலங்கையில் உள்ள முகவர் நிறுவனம் ஆகிய இரண்டின் முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்தார் என்பது இறுதிக் கொடுப்பனவுக் கட்டத்தில் இனங்காணப்பட்டது. எனினும், அப்போதைய அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் இறுதி கொடுப்பனவு விடுவிக்கப்பட்டது. | நடைமுறை பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அடைந்துகொள்ளப் பட வேண்டிய முக்கிய வழங்கல்களுடன் பிணைக்க ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 செப்தெம்பர் 21 இல் தெற்காசியாவின் பயணம் மற்றும் சுற்றுலா பரிவர்த்தனையின் (SATTE 2022) பயணக் கண்காட்சியில் பங்கேற்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் அளித்திருந்த போதிலும் நிகழ்வுக்காக ஸ்டால் டிசைனிங் அன்ட் கென்ஸ்ரக்சன் கம்பனியை தெரிவுசெய்வதற்கான கேள்விகளை கோருவதற்கு 2022 மே 09 வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக ரூபா 7,000,000 முதல் ரூபா 11,357,500 வரை ஆரம்ப மதிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி குறிப்பாக பெயரிடப்பட்ட நியாயமான ஏற்பாட்டாளர் மூலம் ஸ்டாண்ட் (stand) வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2022 ஏப்ரல் 20 ஆம் திகதிய 01/27/2021 ஆம் இலக்க சபை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | அப்போது நிலவிய நிச்சயமற்ற தன்மையால் கடைசி நிமிடத்தில் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. எனவே, நேரக் கட்டுப்பாடுகள் காரணமாக, பெறுகை செயன்முறையைப் பின்பற்றி நிகழ்விற்கான ஸ்டான்ட்டை நிர்மாணிப்பதற்கு உத்தியோகபூர்வ நியாயமான ஏற்பாட்டாளரிடமிருந்து நாங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்கிறோம். | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் (செயற்பாடுகள்), பணிப்பாளர் (புதுமையான அபிவிருத்தி), பணிப்பாளர் (ஊக்குவிப்பு), 02 உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), உதவி பணிப்பாளர் (SPR), உதவிப் பணிப்பாளர் (நிதி), உள்ளக கணக்காய்வாளர் மற்றும் 11 கனிஷ்ட முகாமையாளர்கள் உள்ளடங்கலான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் 2022 இல் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, 2023 இல் உள்ளக நேர்முகப்பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் முதலாவது தொகுதி நேர்முகப்பீட்சை 2023 மே 12 இல் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. சேவை மூப்பு வரிசையில் பதவிநிலைகள் நிரப்பப்படும். | வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 பெப்ரவரி 09 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணியகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஆரம்பத் தகைமைகளை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் பணியகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சம்பவங்கள் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்ப்பின் போது அங்கீகரிக்கப்பட்ட SORs இற்கு ஏற்ப தகைமைகள் உரிய நேர்முகப்பரீட்சை குழுக்களால் பரிசீலிக்கப்படுகின்றன. இதனால் 2009 இல் அங்கீகரிக்கப்பட்ட SOR இன் பிரகாரமான தகைமைகளுக்கு ஏற்ப உத்தியோகத்தர்கள் தகைமைகளைக் கொண்டிருந்தால் அவர்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தனர். எனினும், SORs இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் நேரடியாகப் பொருந்தாத சமீபத்திய ஆட்சேர்ப்புக்கள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஆட்சேர்ப்புக்களும் பதவி உயர்வுகளும் அங்கீகரிக்கப்பட்ட SOR ஐ பின்பற்ற வேண்டும். |